Y-MCA

## அரிசியுடன் கழிவுப்பொருளை விற்ற கூட்டுறவுச்சங்க முகாமையாளர்

கிளிநொச்சி - புதுமுறிப்புக்குளம் கூட்டுறவுச் சங்க கிளையில் மக்களுக்கு விநியோகிக்கப்பட்ட அரிசியில் நிலத்தில் சிந்திய மா மற்றும் கழிவுப் பொருளைக் கலந்து விற்றாராம் அதன் மனேஜர். இது தொடர்பாகத் தெரிவித்த புகார்களையடுத்து அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. மக்களின் புகார்களையடுத்து பொது முகாமையாளர் மேற்படி கிளைக்குச் சென்று அரிசி மூடைகளை பரிசோதனை செய்த போது —04ஆம் பக்கம் பார்க்க

## அரச அலுவலாக கொழும்பு செல்வோரும் ஹோட்டல்களிலேயே தங்கவேண்டும்

யாழ் மாவட்டத்தில் இருந்து அத்தியாவசிய சேவைகளின் நிமித்தம் கொழும்பு செல்லும் அதிகாரிகள் உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதிகள் இன்மையால் பெரும் தொகையான பணத்தைச் செலவழித்து ஹோட்டல்களில் தங்க வேண்டியுள்ளதாக இங்குள்ள அதிகாரி ஒருவர் 'முரசொலிக்கு' தெரிவித்தார். சீரற்ற போக்குவரத்து நிலைமையாலும் கடிதமூலம் செய்யவேண்டிய பல அலுவல்களை கொழும்பு சென்று பல நாட்கள் காத்திருந்தே செய்ய வேண்டி —04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 139 பிரசோற்பத்தி சித்திரை 03 ( 16-04-1991 ) செவ்வாய்

## பார்வை இழந்தபெண்ணும் வங்கிக்கு அலைகிறார்

இரண்டு கண்களினதும் பார்வையை இழந்த பெண் ஓய்வூதியர் ஒருவர் தனது பென்சன் பணத்தைப் பெற யாழ் நகரிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக்கு பல தடவைகள் அலைந்து திரிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவித்துள்ளார். யாழ் செயலக ஓய்வூதியப் பிரிவால் வழங்கப்பட்ட 32 ஆயிரம் ரூபாவை இவ்வங்கியில் வைப்பிலிட்ட நல்லூரில் வசிக்கும் செல்வி அப்பாத்துரை என்ற இப்பெண் இப்பணத்தில் இருந்து நாலாயிரம் ரூபாவைப்பெறுவதற்குச் சென்ற போது இரண்டாயிரம் ரூபாவை மட்டும் வழங்கி விட்டு அடுத்த முறை வருமாறு வங்கியால் சொல்லப்பட்டதாம். கண் பார்வையிழந்த தான் அதிக பணம் செலுத்தி ஓட்டோவில் வந்ததாகவும் இவ்வாறு அடிக்கடி வங்கிக்கு வர முடியாத நிலையை எடுத்துக் கூறியும் இவ்வங்கியினரால் இப்பெண்ணின் பரிதாப நிலையை உணரமுடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. 77

# மணலாற்றில் புலிகள் அதிரடித்தாக்குதல்!

## படையினர் ஐவர் பலி

புத்தாண்டுத் தினத்தன்று மணலாறு மாவட்டத்தில் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். புலிகள் தரப்பில் கான்டீபன் (சந்தியா மார்க் அல்பிறட் மார் — மன்னார்) வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார்

முந்திரிகைக்குளம் முகாமுக்கும் சிலோன் தியேட்டர் முகாமுக்கும் இடையே உள்ள இராணுவக் காவல் அரண் மீதே இத்தாக்குதல் நேற்று முந்தினம் இரவு 11 மணியளவில் நடாத்தப்பட்டதாக தெரிய வருகிறது.

இத்தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத மிகுதிப் படையினர் காவலரணில் இருந்து முகாமுக்குத் தப்பி ஓடி விட்டனராம்.

இத்தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் ஏ.கே.எல். எம்.ஜி-1, ரம் மகசின்-3 ஏ.கே. எல் எம் ஜி லிங்குடன் ரவை-144, ரி 81-1, மகசின்-9 ஏ.கே. பட்மோட்டல்-1 மகசின்-8, 303 ரக துப்பாக்கி-3, மகசின்-3, 303 சார்ச்சர்கிளிப்-60, மொனபகிசெட் 1, பத்றறி-1, 60 எம் எம்மோட்டார் —04 ஆம் பக்கம் பார்க்க

## அம்பாறையில் குடியேற்றம் மீது தாக்குதல்

கடந்த புத்தாண்டு தினத்தன்று அம்பாறை மாவட்டத்தில் உள்ள சிங்களக் குடியேற்ற கிராமம் ஒன்று தாக்கப்பட்டது. இக்கிராமத்தில் இருந்த 17 குடியேற்றவாசிகள் தாக்குதலில் கொல்லப்பட்டதாகவும் பல குடிசைகள் தீக்கிரையானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வன்னியிலிருந்து உழுந்து

வன்னிப் பகுதியிலிருந்து முப்பதினாயிரம் கிலோ உழுந்து கடந்த வாரம் குடாநாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

நல்லூர், சங்கானை, அச்சுவேலி ஆகிய ப.நோ.கூ. சங்கங்களால் கொண்டுவரப்பட்ட இந்த உழுந்து தற்போது பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. (66)

## முஸ்லிம் ஆசிரியர்களின் விவரக்கோவை அனுப்ப உத்தரவு

அண்மையில் ஏற்பட்ட வன்செயல்காரணமாக வடமாகாணத்தை விட்டு சென்ற முஸ்லிம் ஆசிரியர்களின் சம்பள விவரங்களையும், சுயவிவரக் கோவைகளையும் உடனடியாக அனுப்பி வைக்குமாறு கல்வி உயர் கல்வி அமைச்சின் செயலாளர் சகல மாகாணப் பணிப்பாளர்களையும் கோரியுள்ளார். — 4 ஆம் பக்கம் பார்க்க

## சுகாதார திணைக்கள தாதிப்பயிற்சி விண்ணப்பம் கோரப்படுகிறது

சுகாதார திணைக்களம் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனை ஆகியவற்றில் தாதிமார்களாக பயிற்றுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், சுகாதார விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுட்பட ஆறு பாடங்களில் சித்தியெய்திய 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் — 4 ஆம் பக்கம் பார்க்க

## வீதியோரத்தில் பிரசவம்

நல்லூர் இராமலிங்கம் வீதியோரத்தில் நேற்றுமாலை 6 30 மணியளவில் பெண்மணி ஒருவர் குழந்தையொன்றைப் பிரசவித்தார்.

பிரசவ வேதனையையடுத்து சைக்கிளில் இவர் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்ட போது இச்சம்பவம் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் அம்புலன்ஸ் மூலம் தாயும் சேயும் எடுத்துச் செல்லப்பட்டனர். (33)

## பேசாலையில் கைதான அகதிகள் படையினரால் விடுவிப்பு

கடந்த 10ஆம் திகதி புதன்கிழமை பேசாலை அகதிமுகாமுக்குள் அத்துமீறிப்புகுந்து சிறைப்பிடித்த 37 ஆண்களையும் பாதுகாப்பு படையினர் விடுவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் அனைவரும் ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள் முன்னிலையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். —04 ஆம் பக்கம் பார்க்க

## ப. நோ. கூ. லொறிகளுக்கு டீசல் வழங்குமாறு கோரிக்கை

யாழ் மாவட்டத்திலுள்ள ப. நோ. கூ. சங்கங்களுக்குத் தேவையான டீசலை அதிகளவில் அனுப்பிவைக்குமாறு யாழ் அரச அதிபர் அன்ரன் அல்பிறட் அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று தொலைத்தொடர்புகள் மூலம் கொழும்பில் ... கள் நாயகத்துடன் இம்மாவட்டத்தின் உடனடி — 04 ஆம் பக்கம் பார்க்க

## கல்வி நிர்வாக சேவை

## மாசிமாத மதிய உணவு முத்திரை பாடசாலைகளில் வழங்கப்படும்?

பாடசாலை மாணவர்களுக்கான மாசி மாதத்திற்குரிய மதிய உணவு முத்திரைகளான ... சங்கங்கள் அந்தந்தப் பாடசாலைகளில் வைத்து நேரடியாக விநியோகம் செய்ய

## அமெ. படை விலகுகிறது

ஈராக்கின் தெற்கே ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் நிலைகொண்டிருந்த அமெரிக்கப்படைகள் விலக ஆரம்

கடந்த 10ஆம் திகதி புதன் கிழமை பேசாலை அகதிமுகா முக்குள் அத்துமீறிப்புகுந்து சிறைப்பிடித்த 37 ஆண்களை யும் பாதுகாப்பு படையினர் விடுவித்துள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானி கராலய பிரதிநிதிகள் முன் னிலையில் விடுவிக்கப்பட்டுள்

—04 ஆம் பக்கம் பார்க்க

அவை அனுப்பிவைக்குமாறு யாழ் அரச அதிபர் அவர்கள் அல்பிறட் அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் அவ சர கோரிக்கை விடுத்துள் ளார்.

நேற்று தொலைத்தொடர் புகள் மூலம் கொழும்பில் உள்ள அத்தியாவசிய சேவை

## மாசிமாத மதிய உணவு முத்திரை பாடசாலைகளில் வழங்கப்படும்?

பாடசாலை மாணவர்களுக் கான மாசி மாதத்திற்குரிய மதிய உணவு முத்திரைக்கான பெறுமதியை ப. நோ. கூ. சங்கங்கள் அந்தந்தப் பாட சாலைகளில் வைத்து நேரடி யாக விநியோகம் செய்ய இணக்கம் தெரிவித்துள்ள தாக அறியப்படுகிறது.

"லிலி" கப்பல் மூலம் வந்தடைந்துள்ள இவ்வுணவு முத்திரைகளை வழங்க பாட சாலை அதிபர்கள் அந்தந்த ப. நோ. கூ. சங்கங்களுட னும் உதவி அரசாங்க அதி

—04 ஆம்பக்கம் பார்க்க

## அமெ. படை விலகுகிறது

ஈராக்கின் தெற்கே ஆக் கிரமிக்கப்பட்ட பகுதியில் நிலைகொண்டிருந்த அமெ ரிக்கப்படைகள் விலக ஆரம் பித்துள்ளன. படை விலகல் அடுத்த வாரம் முடிவடை யும் எனத் தெரிவிக்கப்படுகி றது.

## கல்வி நிர்வாக சேவை பரீட்சார்த்திகளுக்கு வகுப்பு

இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு மூன்றுக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி களைத் தயார் செய்வதற் கான வகுப்புக்கள் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க ஏற் பாட்டில் இன்று காலை 9-00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்ப மாகி தொடர்ந்து ஐந்து நாள்

—04 ஆம்பக்கம் பார்க்க

## மே தின ஊர்வலம் நடாத்த ப. நோ. கூ, சங்கங்கள் முயற்சி

தொழிலாளர் தினமான மே தினத்தைச் சிறப்பாகக் கொண்டாட யாழ் மாவட்ட ப. நோ. கூ சங்கங்கள் திட் டமிட்டுள்ளன. கடந்த வெள் ளிக்கிழமை யாழ் ப. நோ. கூ. சமாசத்தில் இடம்பெற்ற பொது முகாமையாளர்கள் மகாநாட்டில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

யாழ் மாவட்டத்திலுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களும் கூட்டுற வாளர்களும் இவ் விழாவில்பங்கு

—04 ஆம் பக்கம் பார்க்க

## ஒரேநாளில் பல சைக்கிள்கள் திருட்டு

வண்ணை நாச்சிமார் கோவி லுக்கு முன் நிறுத்திவைக்கப் பட்ட பல சைக்கிள்கள் திருட்டு போயுள்ளன.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## இருமாத பென்சன் வவுச்சர்கள் செயலகம் வந்தன

பெப்ரவரி, மார்ச் மாதங் களுக்குரிய பென்சன் வவுச்சர் கள் யாழ் செயலகத்திற்கு நேற்றுக் கிடைக்கப் பெற்றன.

இவற்றைத் தபால் மூலம் அந்தந்த விலாசதாரர்களுக்கு அனுப்பிவைப்பதில் ஊழியர் களும் உத்தியோகத்தர்களும் தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்ததை அவ தானிக்க முடிந்தது.

—04 ஆம் பக்கம் பார்க்க

## தி. மு. க. - ஜனதாதள் உடன்பாடு விரிசல் நிலையில்

தி. மு. க. ஜனதாதள் உற வில் விரிசல் ஏற்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் தொகுதிப் பங்கீடு தொடர்பாகவே இந் நிலை ஏற்பட்டுள்ளது.

25 சட்டசபை தொகுதிக ளுக்கும் 10 பாராளுமன்ற ஆசனங்களுக்கும் தனித்தே போட்டியிடுவது என ஜனதா தள் எடுத்த முடிவே உறவு விரிசலுக்கு காரணமாகியுள்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம்

மட்டக்களப்பு மாவட்டம் புளுட்டுமாவோடையில் கடந்த வாரம் படையினரு டன் நடைபெற்ற மோதல் ஒன்றில் பானு (கலட்டி) தேவராஜ் (ஈச்சன் தீவு) சுதா (பளுகாமம்) ஆகி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## கப்பலில் வந்த உணவுப்பொருள்கள் நிவாரணத்துக்குப் போதாது

"லிலி" கப்பல் மூலம் கிடைக்கப்பெற்ற உணவுப் பொருள்கள் ஒரு கட்ட உலர் உணவு விநியோகத்திற்குக்கூட போதாது என யாழ் செய லக வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

சாதாரணமாக ஒரு விநி யோகத்திற்கு 1580 மெ. தொன் அரிசி, 558 மெ. தொன் மா, 312 மெ தொன் சீனி 155 மெ. தொன்பருப்பு, 156569 பைக்கற் பால்மா, 55360 லீற்றர் மண்ணெண் ணெய் ஆகிய அத்தியாவசியப் பொருள்கள் தேவைப்படுகின் றன.

—04 ஆம் பக்கம் பார்க்க

## நெல் கொள்வனவு செய்ய 12 லொறிகள் வவுனியாவுக்கு

நெல் கொள்வனவு செய் வதற்காக யாழ் மாவட்டத் தைச் சேர்ந்த 12 ப. நோ. கூ சங்கங்களின் லொறிகள் நேற்று மாலை வன்னிப்பகுதி நோக்கி சென்றுள்ளன.

இம் மாவட்டத்தின் கூட்டு றவுத்துறை சார்ந்த பொறுப் பாளர் ஒருவர் தலைமையில் சென்றுள்ள இந்த லொறிகள் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங் களில் நெல்லைக் கொள்வனவு செய்யவுள்ளன. (65)

## நானாட்டான், முருங்கன் மக்கள் மடுவுக்கு இடம்பெயர்வு

முருங்கன் நானாட்டான் பகுதிகளில் இருந்து பொது மக்கள் மடுவுக்கு இடம் பெயர்ந்து சென்றுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இங்குள்ள [illegible] கன்னியாஸ்திரிகள் மடங் கள் பாடசாலைகள் மற்றும்

— 04 ஆம் பக்கம் பார்க்க

# கடும் நோயுற்ற திருமலை கிராமப்புறத் தமிழர்கள் நகர்சென்று சிகிச்சை பெறவும் இராணுவம் தடை

"திருகோணமலை மாவட்டத்தில் எந்த ஒரு கிராமத்திலுத் தமிழர்கள் வீடுகளில் வசிப்பதில்லை. அவர்கள் அகதி முகாம்களிலேயே உள்ளனர். இம்முகாம்களுக்கு இராணுவத்தினரே காவல் புரிகின்றனர். தேசிய துணைப்படை எனும் முஸ்லிம் ஊர்காவற்படையினர் இம் முகாம்களுக்குச் சென்று இளைஞர்களையும், யுவதிகளையும் கூட்டிச் செல்வது வழமையாகிவிட்டது. அவர்கள் திரும்ப கொண்டுவரப்படமாட்டார்கள்.

இவ்வாறு மூதூர்ப் பகுதி வைத்தியசாலை ஒன்றில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

மூதூரிலிருந்து கொழும்பு சென்று அவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வடமராட்சி இழக்கிற்கு வந்து சேர்ந்தார்.

திருமலை மாவட்டத் தற்போதைய நிலை குறித்து அவர் மேலும் கூறியதாவது:

திருமலை நகர் தவிர்ந்த ஏனைய இடங்களில் பகல் நேரங்களில் மட்டுமே ரோந்து நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர். இரவு நேரத்தில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது புலிகள் கடும் தாக்குதல்கள் நடத்தியதைத் தொடர்ந்தே இரவு நேர ரோந்துகள் நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

வீரமாநகர்ப் பகுதியிலும் ஏனைய அயல் கிராமங்களிலும் முன்னை ஏராளமான தமிழர்கள் அண்மையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன் பல தமிழ் யுவதிகள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டனர். குழந்தைகள் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

தேசிய துணைப்படை எனப்படும் முஸ்லிம் ஊர்காவல் படையினரே இக்கொடூரக் கொலைகளைப் புரிந்தவர்கள் ஆவர். இம் முஸ்லிம் ஊர்காவல் படையில் காத்தான்குடியைச் சேர்ந்த முஸ்லிம்களே அதிகளவு உள்ளனராம்.

திருமலை மாவட்டத்தில் வசிப்பவர்கள் வேறு மாவட்டங்களுக்குச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஒரு கிராமத்தில் உள்ளவர் அடுத்த கிராமத்திற்கு செல்வதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அனுமதி இன்றிச் செல்பவர்கள் இராணுவத்தினரால் சுடப்படுகின்றனர்.

கிராமப்புறங்களில் உள்ளவர்கள் கடும் நோய்வாய்ப்பட்டால் வசதியுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல தமிழர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. வைத்தியரின் அனுமதிப்பத்திரத்துடன் கூட அந்த நோயாளிகள் செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதி கொடுப்பதில்லையாம். இதன் காரணமாக பலர் இறந்துள்ளனராம். கிராமங்களில் பல இராணுவ முகாம்கள் இருப்பதனால் பல நோயாளிகள் அவர்களைக் கடந்து செல்லத் தற்குப் பயந்தே இறந்துள்ளனராம். இப்படிப்பட்ட பல சம்பவங்கள் திருமலை மாவட்டத்தில் தினந்தோறும் நடைபெறுகின்ற போதிலும் அவை வெளியில் தெரியாதபடி மறைக்கப்படுகின்றது. உதாரணமாக தொண்டர் ஸ்தாபனங்கள் அகதிமுகாம்களை படம் பிடிப்பது, கமராவுடன் செல்வது எல்லாம் இராணுவத்தினரால் தடை செய்யப்பட்டுள்ளது கொழும்பிலேயே வைத்து இப்பகுதிக்குச் செல்லும் தொண்டர் ஸ்தாபனங்களுக்கு இராணுவத் தலைமையகத்தினால் இல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாம்.

இதேவேளை கிராமப்புறங்களில் வசிக்கும் முஸ்லிம்களும் சிங்களவர்களும் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி எங்கும் சென்றுவரக் கூடியதாக இருக்கின்றதாம்.

பல பாடசாலைகள் அகதி முகாம்களாக உள்ளன. தமிழ்ப்பிள்ளைகள் கல்வி பயிலும் பாடசாலைகளில் ஆயுதம் ஏந்திய இராணுவத்தினர் காவல் கடமையில் ஈடுபடுகின்றனர்.

இராணுவத்தினரால் கொலை செய்யப்படாத குடும்பத்தினரைத் திருகோணமலையில் காணமுடியாது குறைந்த பட்சம் குடும்பத்தில் ஒருவராவது கொலை செய்யப்பட்டுள்ளனர். பல குழந்தைகள் தாய் தந்தை இன்றி அநாதைகளாக்கப் பட்டுள்ளனர். கிராமப்புறங்களில் ஒன்றுக்கு மேற்பட்டோர் கூடி நின்று கதைத்தால் இராணுவம் அல்லது முஸ்லிம் ஊர்காவல் படையினரால் கூட்டிச் செல்லப்படுகின்றனர்.

அரசாங்க அலுவலகங்களில் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. இதன் காரணமாக அங்கு உள்ள தமிழ் அரச ஊழியர்களுக்கு லீவும் வழங்கப்படுவதில்லை. (43)

## நோய்க்கு மருந்து இல்லை படுத்துறங்க மெத்தையும் இல்லை

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்கு வரும் கடும் நோயாளிகளுக்கு வேண்டிய மருந்துகள் இல்லாததுடன் அவர்கள் சௌகரியமாக படுத்துறங்கவும் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பெரும்பாலான வார்ட்டுகளில் உள்ள கட்டில்களில் மெத்தைகளும் படுக்கை விரிப்புகளும் இல்லை.

விரிக்கப்பட்டிருக்கும் படுக்கை விரிப்புகளும் அசுத்தமான நிலையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. (38)

## அளவைக்கருவிகளுக்கு சீல் தவறுபவர்கள் மீது நடவடிக்கை

யாழ் மாவட்டத்திலுள்ள எட்டு ப.நோ.கூ. சங்கங்களே இதுவரை தராசுபடிகள் உட்பட நிறுவைகள் அளவைகள் கருவிகளுக்கு சீல் வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகள் தோறும் இவ்வாறு சீல் வைக்கும் நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டு வந்தபோதும் இதுவரை பல வர்த்தகர்கள் கூட தமது கருவிகளுக்கு சீல் வைக்கவில்லை என அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு சீல்வைக்கத் தவறிய சங்கங்கள், வர்த்தகர்களுக்கெதிராக தாம் கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ள விருப்பதாகவும் இவ்வதிகாரி மேலும் சொன்னார்.

பொதுமக்கள் தாம் பொருள்களை வாங்கும் பொழுது நிறுவையை அவதானித்துக் கொள்ளுமாறும், நிறை குறைத்து விற்பனையாகும் வர்த்தகர்கள் குறித்து புகார் தெரிவிக்குமாறும் அவர் மேலும் சொன்னார். (66)

## சதாவதானியின் நினைவுதினவிழா

பேனைப்புலோலி சதாவதானி நா. கதிரவேற்பிள்ளையின் 84 ஆவது நினைவுதின விழா இன்று 16 ஆம் திகதி நிலையத்தில் நிலையத் தலைவர் அ. துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. துரைராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். இவ்விழாவன்று பட்டிமன்றங்களும் நடைபெறவுள்ளன. (38)

## ஆழ்கடல் மீன்பிடி பாதிப்பு

முல்லைத்தீவு கடற்பிராந்தியத்தில் கடற்படையினரின் கெடுபிடிகளினால் அப்பகுதியில் தொழில் புரியும் மீனவர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

நாயாறு, கொக்கிளாய், கள்ளப்பாடு ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் இதனால் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்வதில்லை. வெள்ளை போன்ற கடற்படை கெடுபிடி குறைந்த இடங்களிலேயே தற்போது மீன்பிடித் தொழில் மேற்கொள்ளப்படுகின்றது. (38)

## 20 ஆம் திகதி முதல் கிளி. பயிலுநர்களுக்கு 4 நிலையங்களில தொலைக்கல்விப் பயிற்சி

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பயிலுநர் ஆசிரியர்களுக்கான தொலைக் கல்விப் பயிற்சி நெறி ஏப்ரல் 20ம் திகதி ஆரம்பிக்கப்பட்டு செய்து வைக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கான பிரதேச நிலையங்கள் பளை, முரசுமோட்டை, உருத்திரபுரம், பூநகரி ஆகிய நான்கு மகாவித்தியாலயங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

கீழ்காணப்படும் ஒழுங்குகளுக்கு அமைய பயிலுநர் ஆசிரியர்களை 20ஆம், 21ஆம் திகதிகளில் காலை 8-00 மணிக்கு தமது பிரதேச நிலையங்களுக்கு சமூகமளிக்குமாறு கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி கேட்டுள்ளார்.

பளைக்கொத்தணி பயிலுநர்கள் பளை மகாவித்தியாலயத்திற்கும் பூநகரி, முழங்காவில் கொத்தணியினர் பூநகரி ம. வித்தியாலயத்திற்கும் பரந்தன், முரசுமோட்டை வட்டக்கச்சிக் கொத்தணியினர் முருகானந்தா ம.வித்தியாலயத்திற்கும் அக்கராயன், கிளிநொச்சி, உருத்திரபுரம் கொத்தணியினர் உருத்திரபுரம் மகாவித்தியாலயத்திற்கும் 20ஆம், 21ஆம் திகதிகளில் காலை சமூகம் கொடுக்குமாறு கிளி - கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி அறிவித்துள்ளார்.

உருத்திரபுரம் ம. வித்தியாலயத்திற்கு பிரதம கல்வி அதிகாரி எஸ் கமலநாதனும், பளை ம. வித்தியாலயத்திற்கு கல்வி அதிகாரி நா. பொன் சபாபதியும் முரசுமோட்டை முருகானந்த ம வித்து கல்வி அதிகாரி எஸ் தர்மரெட்ணமும் பூநகரி ம. வித்தியாலயத்திற்கு கல்வி அதிகாரி ஆ. குமாரசாவும் பிரதம விருந்தினராகக் கலந்து பயிற்சி நெறியை ஆரம்பித்து வைப்பார்கள். (ப-6, 35)

## சீருடை, அடையாள அட்டை அணியாத சுகாதார ஊழியர்களுக்குத் தண்டம்

யாழ் பிராந்திய அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சகல தரத்து ஊழி டையை தமது உடையில் யாவருக்கும் தெரியும் படியாக

## மந்தகதியில் இயங்குகிறதாம் இந்துசமய அமைச்சு மீது சிங்கள உறுப்பினர் குற்றச்சாட்டு

இந்துசமய கலாசார அமைச்சின் நடவடிக்கைகள் மிகவும் மந்தகதியிலேயே உள்ளதாகத் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அத்தாவுட செனவிரட்ண குற்றம் சாட்டியுள்ளார்.

குமாரி இரண்டு மாதங்களுக்கு முன் தெரணியகலை சைவமகாசபை தனக்கு விடுத்த வேண்டுகோளை அடுத்து இக்கோயிலைச் சுற்றியுள்ள 60 பேர்ச்சஸ் காணியைச் சுவீகரிக்குமாறும் அதற்குத் தேவைப்படும் பணத்தையும், மந்திரிசபையின் அனுமதியையும் தாம் பெற்றுத்தருவதாகவும் உறுதி அளித்தும் இந்துசமய கலாசார அமைச்சின் அதிகாரிகள் கவனயீனமாக இருப்பதாகவும் அவர் இது குறித்து எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதோடு அமைச்சர் தேவராஜ் இவ்விடயத்தில் உரிய நடவடிக்கையெடுக்காவிடில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப் போவதாகவும் தெரிவித்துள்ளார். (83)

## 'கட்டாய வேலை' இராணுவம் வழங்குகிறது தம்பலகாமம் தமிழர்கள் தவிப்பு

தம்பலகாமம் பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்களை அங்குள்ள இராணுவத்தினர் கட்டாயவேலைகளில் ஈடுபடுத்தி வருவதாக திருமலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

தம்பலகாமம் அகதிமுகாமில் இருப்போரும் தம்பலகாமம் தெற்குப் பகுதியில் மீளக் குடியமர்ந்தோரும் கத்தி, கோடரி, மண்வெட்டி, சகிதம் இராணுவமுகாமுக்கு வரவேண்டும் எனக் கடந்த வாரம் பணிக்கப்பட்டனர்.

இவ்வாறு வராதவர்களால் தண்டனை உண்டு என்றும் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது.

அறிவித்தலையடுத்து இராணுவ முகாமுக்கு வந்தோர் தம்பலகாமம் கிண்ணியா வீதியில் சிவப்புப் பாலம் வரை உள்ள வீதியின் இருமருங்கிலும் உள்ள மரங்களை வெட்டியகற்றும் பணியில் பலவந்தமாக ஈடுபடுத்தப்பட்டனர். (38)

### நீர்மட்டம் குறைகிறது

கொம்படி வெட்டையில் நீர்மட்டம் மிகவும் குறைந்துள்ளது. மிகவும் சிரமத்தின் மத்தியிலே படகுச் சேவை அங்கு தற்போது நடைபெறுகின்றது.

இதனால் உடனடியாக வாசலப்போக்குவரத்து ஆரம்பிக்கக்கூடியதாக இல்லை என

சிறு விளம்பரம்

ஊழியர் சங்கம்

பரந்தன், முரசுமோட்டை (ப-6, 35)

## சீருடை, அடையாள அட்டை அணியாத சுகாதார ஊழியர்களுக்குத் தண்டம்

யாழ்ப்பிராந்திய அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சகல தரத்து ஊழியர்களும் மற்றும் யாழ் சுகாதார திணைக்கள நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களும் தமக்குரிய உத்தியோகபூர்வ சீருடையை அணிந்து கடமையாற்ற வேண்டும் என்று மிகவும் கண்டிப்பான சுற்றறிக்கையொன்றை யாழ் பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர் விடுத்துள்ளார்.

சீருடை அணியாது கடமையாற்றும் ஊழியர்களுக்கு அன்றைய தினத்திற்கு சம்பளம் வழங்காது விடவும் ஆலோசிக்கப்பட்டு வருவதாக இச் சுற்றறிக்கையில் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சகல ஊழியர்களும் தமக்கு வழங்கப்பட்ட திணைக்கள அடையாள அட்டையை தமது உடையில் யாவருக்கும் தெரியும் படியாக தொங்கவிட வேண்டும் என்றும் இந்த சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடமை நேரத்தில் திணைக்கள அடையாள அட்டையில்லாது காணப்படும் ஊழியர்களுக்கு தினமொன்றுக்கு பத்து ரூபா வீதம் குற்றப்பணம் விதிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை கடந்த வாரம் யாழ் மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலுமுள்ள சகல அரசாங்க வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கும் யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (13)

## பெருமளவு அபிவிருத்திப் பணம் 17 வருடமாக விரயமாகிறதாம்

"பயங்கரவாதச் செயல்கள் காரணமாக மக்களின் அபிவிருத்திக்குச் செலவிடப்பட வேண்டிய பெருமளவு பணம் கடந்த 17 வருடங்களாகப் பாதுகாப்புக்காகச் செலவிடப்பட்டு விரயமாக்கப்பட்டு வருகின்றது."

இவ்வாறு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ அனுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

வேண்டிய மருந்துகள் இல்லாததுடன் அவர்கள் சௌகரியமாக படுத்துறங்கவும் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.


### சிறு விளம்பரம்

#### சேவை

உங்கள் பெறுமதி மிக்க புத்தகங்கள் கொப்பிகள் மற்றும் உங்கள் தொகுப்புக்கள் அனைத்தும் மிக அழகான முறையில் (பைபிண்டிங்) கட்டிக் கொடுக்கப்படும் நூலகங்களுக்கும் மற்றும் கல்லூரிகளுக்கும் குறைந்த கூலியில் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு பூபாலசிங்கம் புத்தகசாலை, 255 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 04039

#### ஜோதிடம்

(13-4-91) ராகு கேது மாற்றமும், புத்தாண்டுப் பலன்களும் விலை ரூபா 6. எங்கும் விற்பனையாகின்றது. ராகு கேது மாற்றத்தின் பின்பும் செவ்வாயின் கெட்ட பார்வையால் யுத்தம் தொடரும் நாள்களுக்கும், ஜோதிட கணிப்புக்களுக்கும் Prof சத்தியதாஸன் ஞானம்பி, சித்தன்கேணி. 04072


பூச்சும் இல்லை.

விரிக்கப்பட்டிருக்கும் படுக்கை விரிப்புகளும் அசுத்தமான நிலையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. (38)

## ஊழியர் சங்கம்

யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் 15-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த 9 ஆம் திகதி கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்-வ. ஸ்ரீதரன் உபதலைவர்-ஜெ. ஏ. அகஸ்ரீன் இணைச் செயலாளர்-என் மயில்வாகனம் எஸ் கலாராஜ் பொருளாளர்:-என் சாயநாதன் உபபொருளாளர்:-செல்வி இ. சண்முகரட்ணம் நிர்வாக சபை உறுப்பினர் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## வன்னியில் கண்நோய்

வன்னிப் பகுதியில் தற்போது தெருப்புக் காய்ச்சல், கண்நோய் என்பனவால் பாதிக்கப்படுவோர் தொகை அதிகரித்துவருகிறது.

இப்பகுதியில் கடும் உஷ்ண நிலை ஏற்பட்டுள்ளதாலும், உரிய மருந்துவகைகள் இல்லாததாலும் இந்நோயைக் கட்டுப்படுத்த முடியாதிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது (38)

வரவேண்டும் என கடந்த வாரம் பணிக்கப்பட்டனர்.

இவ்வாறு வராதவர்களால் தண்டனை உண்டு என்றும் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது.

அறிவித்தலைப்படுத்து இராணுவ முகாமுக்குச் சென்

துள்ளது. மிகவும் சிரமத்தின் மத்தியிலே படகுச் சேவை அங்கு தற்போது நடைபெறுகின்றது.

இதனால் உடனடியாக வரவப்போக்குவரத்து ஆரம்பிக்கக்கூடியதாக இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (48)


உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றது!

### ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் புது வருட வந்தனங்கள்

கண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கையில் அமைந்திருக்கின்றது.

சுகாதாரமான சுவையான உணவு வகைகளுக்கும் மற்றும் சிற்றுண்டி ஓடர்களுக்கும் ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

இத்திப்பான உணவுப் பார்சல்கள் ரூபா 25/- மட்டுமே.

19/3 கொழும்புத்துறைசாலை, கண்டிக்குளி. 04054



### முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

#### செல்வன் புவிராஜ்

கல்வளை, சண்டிலிப்பாயைச் சேர்ந்த திரு. திருமதி சிவலிங்கம், ஜெயந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் புவிராஜ் தனது முதலாவது பிறந்த தினத்தை இனிது 16.4.91-ல் தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவர் பல்லாண்டு காலம் வாழ பெற்றார், உற்றார், உறவினர் வாழ்த்துகிறார்கள். 04081

# கடந்த ஒருவார கால மோதலில் மட்டும்

# 70 படையினர் பலி; பலர் படுகாயம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை முடிவடைந்த ஒருவார காலத்தில் மட்டும் விடுதலைப்புலிகளுடனான மோதலில் எழுபது படையினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் பெருமளவு படையினர் காயமடைந்துள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

வடக்குக் கிழக்கில் இடம் பெற்ற பல்வேறு மோதல்களில் இவர்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை வரை காரைநகரிலும், மன்னாரிலும் மூன்று வாரங்கள் இடம் பெற்ற மோதலில் மட்டும் 117 இராணுவத்தினர் கொல்லப்பட்டு, 187 படையினர் காயமடைந்ததாக அரசு ஏற்கனவே ஒத்துக் கொண்டிருந்தமை தெரிந்ததே.

அரசின் மற்றொரு குறிப்பில் வடக்குக் கிழக்கில் இதுவரை இடம் பெற்ற யுத்தத்தில் 487 படையினர் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 70 நிலையங்களில் விசேட பரீட்சை

### பதினாறாயிரம் மாணவர்கள் தோற்றுவர்

எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) விசேட பரீட்சைக்கு யாழ் மாவட்டத்திலிருந்து 11,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் மொத்தம் 70 நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறவுள்ளதாக யாழ் கல்வித் திணைக்களப் பரீட்சைப் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை வடக்குக் கிழக்குப் பகுதியில் மொத்தம் 144 நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஐந்து நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறும். (70)

## தகவல் நிலையம் அமைப்பு

க. பொ. த. (உயர்தர) விசேட பரீட்சை சம்பந்தமான நடைமுறைச் சிக்கல்கள் பற்றிய தகவல்களை வழங்குவதற்காக யாழ் கல்வித் திணைக்களத்தில் ''க. பொ. த (உயர்தர) விசேட பரீட்சை தகவல் நிலையம்'' ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையத்திற்கு பிரதம கல்வி அதிகாரி (கல்வி நிர்வாகம்) ஆர். சிவானந்தம் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பரீட்சார்த்திகள் பரீட்சை சம்பந்தமான தகவல்களை இந்நிலையத்துடன் தொடர்பு கொண்டு பெறமுடியும். (70)

## அமெரிக்காவில் தமிழ் பைலட்

### அகால மரணம்: சடலம் கொழும்பு வந்தது

தமிழ் விமானப் பைலட் ஒருவர் மத்திய அமெரிக்காவில் உள்ள பெனிக் நகரத்தில் அகால மரணமடைந்தார்.

கந்தசாமி மூர்வீதரன் என்ற இந்த பைலட்டின் சடலம் அங்கிருந்து எடுத்து வரப்பட்டு பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

## மங்கையர் மனையியலில் பட்டப்படிப்பு படிக்கலாம்

இலங்கை பல்கலைக் கழகங்களில் மனையியல் துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான வசதிகள் விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கென பொருத்தமான பாடத்திட்டமொன்று தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது.

தற்பொழுது க. பொ. த. உயர்தரம் வரையிலும் தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் டிப்ளோமா வரையிலுமே மனையியல் கல்வியை கற்பதற்கான வசதிகள் உள்ளன.

## அனுமதிப் பத்திரம் விநியோகம்

வலிமேற்குப் பிரதேச சபையின் உப- அலுவலகங்களில் 1991 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கர வண்டிகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுவருகின்றது- (13)

## ஸ்ரீ நாகபூஷணி

சரித்திரப் பிரசித்தி வாய்ந்த நயினை நாகபூஷணி அம்மன் கோவில் அறங்காவல் சபை 'நாகம் பூசித்த நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்' என்னும் கை நூலொன்றை அண்மையில் வெளியிட்டுள்ளது. அழகிய முவர்ண அட்டையுடனான இந்நூலில் பல சிறப்பம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

இங்கு நிலவிய நாகவழிபாடு பற்றிய செய்திகள், நயினை நாகபூஷணி அம்மன் ஆலய வரலாறு, நாகபூஷணி அம்மை ஊஞ்சல் என்பனவற்றுடன் வேறு சிறப்புக் கட்டுரைகளும் இந்நூலை அலங்கரிக்கின்றன. அம்பாள், ஆலய, தேர்ப் பிரதிமைப் படங்களும் நூலுக்கு அழகூட்டுகின்றன.

பொருளாளர், அறங்காவலர் சபை, நயினை நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு என்ற முகவரிக்கு எழுதி இந் நூலைப் பெற்றுக் கொள்ளலாம். நூலின் விலை ரூபா இருபத்தைந்து.

## மத்தியகிழக்குக்குச் செல்வோருக்கு குறைந்த கட்டண கப்பல் சேவை

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்வோருக்கு கப்பல் மூலம் குறைந்த கட்டணத்தில் பயணம் செய்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

விமான மூலம்பயணம் செய்வதற்கு அதிகபணம் தேவைப்படுவதாகவும், கப்பல்மூலமானபிரயாணத்துக்கு மிகக்குறைந்த கட்டணமே அறவிடப்படுவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

லைசென்ஸ் பெற்ற வெளிநாட்டு தொழில் ஏஜன்ஸிகளின் சங்கம் கப்பல்நிறுவனங்களுடன் இதுகுறித்துப்பேச்சு நடாத்தி வருகின்றது.

## கழிவு மாவைக் கலந்துவிற்ற

### சங்க முகாமையாளர் இடைநிறுத்தம்

கோழித்தீவன கழிவு மாவைக் கூட்டி அன்னிக் கலந்து பாவனையாளர்களுக்கு விற்பனை செய்த கூட்டுறவுச் சங்க முகாமையாளர் ஒருவர் வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

கழிவு மாவைப் பெற்றுக் கொண்ட பெண் பாவனையாளர் ஒருவர் செய்த முறைப்பாட்டையடுத்தே கூட்டுறவுச் சங்க இயக்குநர்சபை திடீர் பரிசோதனை நடாத்தி முகாமையாளரைக் கையும் மெய்யுமாகப் பிடித்து வேலை நீக்க உத்தரவை வழங்கியது.

கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கத்தின் ஐதுமுறிப்புக் கிளையிலேயே இந்தக் கழிவு மா விற்பனை இடம்பெற்றது. (ம-6)

## மருதடி விநாயகர் ஆலயம் நோக்கி 'ஜல்; ஜல்' எனும் சலங்கை ஒலி

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரதோற்சவ விழாவில் யாழ் குடாநாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

திருவிழாவிற்கு வந்தோரில் பெருமளவானோர் மாட்டு வண்டிகளையே தமது பயணத்திற்கு பயன்படுத்தியமை சிறப்பு அம்சமாக இடம் பெற்றிருந்தது.

பல வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட சில அலங்கார வண்டிகளும் ஜல் ஜல் சலங்கையொலியுடன் ஆலயத்தை நோக்கிச் சென்று கொண்...

இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் இலங்கை இந்திய உறவிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இரு நாடுகளுக்குமிடையில் பரஸ்பர நல்லெண்ணமும் நட்புறவும் தோன்றியுள்ளன. இதன் காரணிகள் பற்றி H. L. D. மகிந்தபால எழுதிய கட்டுரையின் சிலபகுதிகளை இங்கு தருகின்றோம்.

## இந்தியாவின் போக்கில் தென்படும் மாற்றம்

இலங்கை இந்திய வெளியுறவு அமைச்சர்களுக்கிடையே கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் இரு நாடுகளுக்கிடையிலும் உள்ள உறவுகளை மேலும் பலப்படுத்த வழி கோலியுள்ளன.

இந்தியத் தூதுவர் அளித்த விருந்தில் பேசிய இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹேரத் இந்தியத் தூதுவரின் சேவையை வெகுவாகப் பாராட்டினார். இரு நாடுகளுக்குமிடையில் பரஸ்பர நல்லெண்ணத்தையும் உறவையும், தோற்றுவிப்பதற்கு அவர் எடுத்த முயற்சி பாராட்டத் தக்க தெனக்கூறினார்.

திரு. டிக்சித் இந்தியத் தூதுவராக இருந்த காலத்தில் அவர் இந்தியாவின் நிபந்தனைகளை இங்கு திணித்துக் கொண்டிருந்தார். அவரைப் பொறுத்தவரை இலங்கை இந்திய ஒப்பந்தம் எவ்விதத்திலும் மாற்றப்பட முடியாத இறுதியான ஒன்றாயிருந்தது. அதிகாரப் பரவலாக்கம் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற போர்வையில் இந்தியா இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுவதற்கு முற்பட்டது.

தற்போது இந்தக் கடுமையான போக்கில் மாற்றம் ஏற்பட்டு ஒப்பந்தத்தில் மாற்றங்கள் செய்யமுடியும் என்ற நிலை உருவாகியுள்ளது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் இந்தியா தலையிடுவதற்கான சூழ்நிலை, இலங்கையிலும், இந்தியாவிலும், சர்வதேச அரங்கிலும் உருவாக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச அரங்கில் சமீப காலத்தில் ஏற்பட்ட மாற்றமானது இந்தியா இலங்கை மீது கொண்டிருந்த நிலைப்பாட்டிலும் குறிப்பிடத் தக்க மாற்றத்தை உண்டு பண்ணியது.

அமெரிக்காவின் செல்வாக்கு சர்வதேச அரசியல் சூழலில் உயர்ந்தது. சோவியத் யூனியனைச் சார்ந்த மூன்றாவது மண்டல நாடுகள் அமெரிக்காவின் பக்கம் சார்ந்தன. இச் சூழ்நிலையில் இந்தியாவும்; இலங்கையும் சர்வதேச அரசியல் கொள்கைகளில் எவ்வித முரண்பாடுமின்றிச் செயற்பட்டன. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பனிப்போர் (Cold war) நிகழ்ந்த காலம் (1987) கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் முக்கியத்துவத்தை இழந்தது.

இந்திய நேரு - காந்தி பரம்பரை ஆட்சிக்குக் கீழ் இருந்த காலத்தில் இந்த ஒப்பந்தம் இலங்கை மீது திணிக்கப்பட்டது. இப்போது காலம் மாறிவிட்டது. ராஜீவ் காந்தி அரசியல் அதிகாரத்தில் இருந்து அகற்றப்பட்டு விட்டார். இந்திய அரசியலில் புதிய மாற்றங்களும், சிந்தனைகளும் தோன்றி விட்டன. தென்னாசியாவில் ஆதிக்கம் செலுத்தும் வல்லரசாக இந்தியா இருக்க வேண்டுமென நேரு காந்தி - பரம்பரையின் நிலைப்பாடு இருந்தது அந்த நிலை மாறி, புதிய அரசியல் சிந்தனைகளுடனும் அரசியல் ஞானத்துடனும் வி. பி. சிங் தோன்றினார். ''பலத்தை வைத்து ஆதிக்கம் செலுத்தலாம். அதுவே சரியான வழி'' என்ற இந்திரா காந்தியின் கொள்கைகள் குழி தோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டன.

புதிய அரசியல் தலைமைப்பீடம் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகளில் இருந்த ஆக்கிரமிப்புத் தன்மையை அகற்றியது. இலங்கை-இந்திய உறவுகளில் புதிய பரிமாணத்தை உருவாக்கியது அயல் நாடுகளுடன் நல்லுறவைப் பேணுவதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இரு நாடுகளுக்கு மிடையில் நிலவிய நல்லுறவு பாதி...

செய்த கூட்டுறவுச் சங்க முகாமையாளர் ஒருவர் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

கழிவு மாவைப் பெற்றுக் கொண்ட பெண் பாவனையாளர் ஒருவர் செய்த முறைப்பாட்டையடுத்தே கூட்டுறவுச்

மாகப் பிடித்து வேலை நீக்க உத்தரவை வழங்கியது.

கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கத்தின் புதுமுறிப்புக் கிளையிலேயே இந்தக் கழிவு மா விற்பனை இடம்பெற்றது. (ப-6)

இன்றைய இடம்பெற்ற இரதோற்சவ விழாவில் யாழ் குடாநாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

திருவிழாவிற்கு வந்தோரில் பெருமளவானோர் மாட்டு

சிறப்பு அம்சமாக இடம் பெற்றிருந்தது.

பல வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட சில அலங்கார வண்டிகளும் ஜல் ஜல் சலங்கையொலியுடன் ஆலயத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. (ப- 11)

புதிய அரசியல் தலைமைப்பீடம் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகளில் இருந்த ஆக்கிரமிப்புத் தன்மையை அகற்றியது. இலங்கை-இந்திய உறவுகளில் புதிய பரிமாணத்தை உருவாக்கியது அயல் நாடுகளுடன் நல்லுறவைப் பேணுவதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இரு நாடுகளுக்கு மிடையில் நிலவிய நல்லுறவு பாதிப்படைந்ததற்கு இந்த ஒப்பந்தம் காரணியாகும்.

இந்த ஒப்பந்தத்திற்குப் பதிலாக நட்புறவு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்குவதில் எவ்வித கஷ்டமும் இருக்காது. இரு நாடுகளும் நட்புறவின் அடிப்படையில் திறந்த மனதுடன் செயற்பட்டால் இது சாத்தியமாகும்.

தமிழில் : வி. பி

## மாணவர்களிடம் ஆசிரியர்கள் தோல்வி

பாடசாலை விடுமுறை தினத்தையொட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இப்பாடசாலை ஆசிரியர் மாணவர் அணிகளுக்கிடையே நடைபெற்ற மென்பந்து துடுப்பெடுத்தாட்டப் போட்டியில் மாணவர் அணி 6 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (ப-10)

## இரணைமடுகுளத்திட்டப்பகுதிகளில் வேளாண்மைச் செய்கை இரட்டிப்பு

கிளிநொச்சி இரணைமடுக் குளத்திட்டத்தின்கீழ் கடந்த வருடத்திலும் பார்க்க இம்முறை இரட்டிப்பு சிறுபோக வேளாண்மை செய்யப்பட்டுள்ளது.

இரணைமடுக்குளத்தில் இம்முறை கூடுதல் தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டதினால் 10,500 ஏக்கர் நிலத்தில் சிறுபோக நெற்செய்கை செய்யப்பட்டுள்ளதாக விவசாய திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (38)

## அரச ஊழியருக்கு 60 மாதச்சம்பளம் வாகனக்கடனாகக் கிடைக்கும்

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாகனக்கடன் அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னர் அரசாங்க ஊழியர்களுக்கு 24 மாதச்சம்பளத் தொகை அல்லது அறுபதினாயிரம் ரூபா இதுவரை வாகனக்கடனாக வழங்கப்பட்டுவந்தது.

ஆனால் புதியதிட்டத்தின்படி இனிமேல்மோட்டார் வாகனமொன்றை அல்லது முச்சக்கர ஓட்டோ வண்டியொன்றை வாங்குவதற்குஅரசாங்கஊழியர் ஒருவர்தனது அறுபது மாதச் சம்பளத்தொகையைக் கடனாகப்பெற்றுக் கொள்ள முடியும்.

இக்கடனுக்காக அவ் ஊழியர் 7.2 வீத வட்டி செலுத்த வேண்டும்.

## தொழிற்சாலை செயலிழந்தது

தெல்லிப்பழை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் சேந்தாங்குளத்திலுள்ள பனம் பாணித் தொழிற்சாலை கீரிமலைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து கைவிடப்பட்ட நிலையில் செயலிழந்துள்ளது.

இதனால் மேற்படி சங்கத்திற்கு நான்கு இலட்ச ரூபா நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

பெருந்தொகையான பனம் பாணி இத்தொழிற்சாலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (13)

## பெரியவிளான் உற்சவம்

பெரியவிளான் வடசேரி விக்னேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று இம் மாதம் 27 ஆம் திகதியன்று இரதோற்சவமும், 28 ஆம் திகதியன்று தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன. (13)

## நயினை நாகபூஷணி புதிய அறங்காவலர் சபை

நயினை நாகபூஷணி அம்மன் கோயில் நடப்பாண்டுக்கான புதிய அறங்காவலர்சபை அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

க. நாகேஸ்வரன் தலைவராகவும், நா. க. குமாரசூரியர் செயலாளராகவும், க. உருத்திரகுமாரன் பொருளாளராகவும் ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

## 40 யாழ் பாடசாலைகளில் வாழ்க்கைத்திறன் கல்வி போதனை

1992 ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் 40 பாடசாலைகளில் வாழ்க்கைத் திறன் கல்வித்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக வாழ்க்கைத் திறன் கல்வி அதிகாரி சி. சுப்பிரமணியம் சகல கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார்.

இதன் பொருட்டு ஒவ்வொரு கோட்டங்களிலிருந்தும் ஆகக் கூடியது 5 பாடசாலைகளை தெரிவு செய்து அனுப்புமாறும் அவர் கோட்டக்கல்வி அதிகாரிகளை கோரியுள்ளார்.

இக் கல்வித்திட்டம் ஆண்டு 7 ஆம் வகுப்புக்கு தெரிபட்ட பாடசாலைகளிலேயே அறிமுகப்படுத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (78)

## கொப்பிகள் விநியோகம்

யாழ் கல்வித்திணைக்களத்தினால் வேலணைக் கோட்டக்கல்வி அலுவலகத்துக்கு இருபதினாயிரம் 80 பக்க அப்பியாசக் கொப்பிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இவ் அப்பியாசக் கொப்பிகள் யாவும் ஒவ்வொரு கொத்தணிகளுக்கும் அவ்வப்பகுதியிலுள்ள ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

# தீவுப்பகுதிப் படகுச் சேவைகள் இடைநிறுத்தம்
# உணவுப் பொருள் அனுப்ப முடியாத நிலை

எழுவைதீவு, அனலைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு ஆகிய பகுதி மக்களுக்கு கடந்த இரண்டு வாரங்களாக உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லையென அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த இரண்டு வாரங்களாக தீவுப்பகுதி படகுச் சேவை நடைபெறாததால் இப்பகுதிகளுக்குரிய அத்தியாவசியப் பொருள்களை கொண்டுசெல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலை நீடிக்குமானால் அங்குள்ளவர்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிகாட்டுவான் படகுச் சேவைக்கு கடற்படையினர் அனுமதி வழங்காததாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னர் உணவுக் கப்பல்கள் நயினாதீவுக்கு கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டு வந்த போதிலும் தற்போது அவை வருவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (33)

## யாழ் குடாநாட்டுக்கு கிளிநொச்சியிலிருந்து பால்

கிளிநொச்சியில் தரமான சுத்தமான பால் விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி செயலக சமூக சேவை உத்தியோகத்தரும் பாற்பொருள் உற்பத்தி விற்பனைச் சங்க தலைவருமான போல். நித்தியானந்தம் முரசொலிக்குத் தெரிவித்துள்ளார்.

கிராமங்களில் உள்ள மக்களின் நலன்கருதி பாற்சாலை விரைவில் திறக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை கிளிநொச்சியிலிருந்து யாழ் குடா நாட்டுக்கு விரைவில் பால் விற்பனை செய்யப்படவுள்ளதாக பாற்சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரு லீற்றர் தரமான பால் 6 ரூபாவாக விற்கப்படும் அத்துடன் சுத்தமான தயிரும் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ப 6)

## கிளிநொச்சியில் அரச ஊழியருக்கு அத்தியாவசிய பொருள்கள்

கிளிநொச்சி செயலகம் மற்றும் அரச திணைக்கள ஊழியர்களின் நன்மை கருதி மண்ணெண்ணெய், சவர்க்காரம் உட்பட அத்தியாவசியபொருள்களும் சைக்கிள் உதிரிப்பாகங்களும் விலைக்கட்டுப்பாடுடன் கிளிநொச்சியில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் எடுத்த நடவடிக்கையால் இவை இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஊழியர்களின் வரவை அதிகரித்து வேலைகள் சீராக நடைபெறவே இவ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது எனத்தெரிவிக்கப்படுகிறது (ப.6)

## கொழும்பிலிருந்து வந்த தபால்கள் இன்று முதல் விநியோகம்

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் பருத்தித்துறைக்கு வந்த விலி கப்பலில் கொண்டு வரப்பட்ட 198 தபால் பொதிகளில் வடமராட்சி தவிர்ந்த ஏனையவை நேற்று யாழ்பிரதம தபாலகத்தினரால் எடுத்து வரப்பட்டன.

இத்தபால் பொதிகள் இன்று தரம் பிரிக்கப்பட்டு விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டுத் தபாலகங்களுக்கான தபால் பொதிகள் வழமைபோல் அனுப்பிவைக்கப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது. (83)

### வீரமரணம்…

யோர் வீரமரணமடைந்தவர் ஆனையிறவில் நடைபெற்ற வெடிவிபத்தில் வள்ளல் (கிளிநொச்சி) வீரமரணமடைந்தார். (71)

அறிவித்தல்
கல்வி பட்டப்பின்

### அரிசியுடன்…

விடயம் தெரியவந்தது.

இதேபோல சில இடங்களில் நிறை குறைவாக பொருள்கள் அளக்கப்படுவதாகவும் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இவ் வாரம் 4ஆம் கட்ட இலவச நிவாரணம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பொது மக்கள் நிறுவையை அவதானித்துப் பொருள்களை வாங்குமாறும் செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ப.6

### இருமாத…

போதியளவு கட்டுநிதி யாழ் செயலகத்தில் இருப்பதனால் இக்கொடுப்பனவுகளை எதுவித தாமதமுமின்றி வங்கிகள் மேற்கொள்ள அந்தந்த வங்கிகளுக்கு காசோலைகள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக ஓய்வூதியப் பிரிவினர் தெரிவித்தனர் (66)

## விவசாயப் பண்ணைக்கு நீர் இறைக்கும் யந்திரம் வந்தது

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இயங்கும் மாவட்ட அரசினர் விவசாயப் பண்ணை கடந்த பல மாதங்களாக எரிபொருள், மின்சாரத்தடைகள் காரணமாக விதைகள், உற்பத்தி செய்வதற்கும் பழமர நாற்று மேடைகளை தயாரித்து நாற்றுக்களை வழங்குவதற்கும் இருந்து வந்த கஷ்டங்களை அடுத்து தேவர் பாதுகாப்பு நிதியத்தால் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் விவசாயப் பண்ணையின் உற்பத்திகளுக்கு இருந்து வந்த கஷ்டம் ஓரளவு நீங்குமென யாழ் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் கே. குணரட்ணம் தெரிவித்துள்ளார். (33)

## வலிமேற்கு பகுதிக்கு மதிய உணவு முத்திரை

வலிமேற்கு சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரை அட்டைகள் ஒழுங்கான முறையில் வழங்கப்பட்டுள்ளன.

இப்பகுதி அதிபர்கள் வலிமேற்கு உதவி அரசாங்க அதிபரதும் பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அதிகாரியினதும் ஆலோசனைக்கிணங்க தமது கடமைகளை சரிவரச் செய்தமையாலேயே இந்த மதிய உணவு முத்திரை அட்டைகள் ஒழுங்காக வழங்கப்பட்டதாக கூட்டுறவு வட்டாரங்கள் தெரிவித்தன. (12)

## விவசாயிகளுக்கு பயிற்சி

ஆசிய ஐக்கிய நாடுகள் திட்டத்தின் கீழ் சிறுதானிய உற்பத்தியைப் பெருக்குவதற்கு தொண்டர் ஸ்தாபனங்களினால் வழங்கப்பட்ட பொருள்களும் எரிபொருள்களும் யாழ் மாவட்டத்துக்கு கிடைத்துள்ளன.

இத்திட்டம் வெற்றி பெற தொழில் நுட்ப ரீதியான அறிவுரைகளையும் பயிற்சி வகுப்புகளையும் விவசாயிகளுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 33

### நாணாட்டான்…

அரச அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

மடுப் பகுதியில் உள்ள அகதிகளின் தொகை மேலும் அதிகரித்துள்ளதாகவும், இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (83)

### மணலாறில்…

ஷெல்-11, 60 எம். எம் மோட்டார் பராலைட்-2, ரைபிள் கிரனைட்- 7, ஜே. ஆர் கிரனைட்-9. (71)

### மேதின…

### அரச…

புள்ளி எனக்குறிப்பிட்ட அந்த அதிகாரி தமக்கு இதனால் ஏற்படும் செலவினங்களுக்குப் பதிலாகத் தாம் ஒரு குறிப்பிட்டதொகையே அரசிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறான அத்தியாவசிய அலுவல்கள் நிமித்தம் செல்பவர்களுக்கு கொழும்பில் தங்குமிட வசதிகளை இங்குள்ள உயர் அதிகாரிகள் சம்பந்தப்

## 52 புலோலி விவசாயிகளுக்கு ஏழரை லட்சம்ரூபா வங்கிக்கடன்

புலோலி மேற்கு வெங்காயச் செய்கையாளர்கள் ஐம்பத்திரண்டு பேருக்கு பருத்தித்துறை இலங்கை வங்கி ஏழரை இலட்சம் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

இலங்கை வங்கி முகாமையாளர்கள் குழு சம்பந்தப்பட்ட வெங்காயச் செய்கை நிலங்களைப் பார்வையிட்டதோடு விவசாயிகள் மத்தியில் கருத்தரங்கொன்றை ஏற்பாடு செய்திருந்தது. (88)

## பரீட்சை நடைபெறும்போது வெள்ளை நீலக் கொடிகள்

விசேட உயர்தரப் பரீட்சைகள் நடைபெறும் நிலையங்களில் புதிய நீல, வெள்ளை நிறக்கொடிகள் பறக்கவிடல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் கல்விப் பணிப்பாளர்கள், பாதுகாப்பு அதிகாரிகள், தொண்டர் நிறுவன அதிகாரிகள் கலந்து கொண்ட மாநாட்டில் இம் முடிவு எடுக்கப்பட்டது.

அதேவேளை வினாத் தாள்கள் விடைத்தாள்கள் எடுத்துச்செல்லும் வாகனங்களிலும் நீல-வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்படும்.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே மேற்படி கொடிகள் பறக்கவிடப்படல் வேண்டும் எனக் கூறப்படுகிறது.

### சுகாதார…

கோரப்பட்டுள்ளன.

இவர்கள் போட்டிப் பரீட்சை மூலமே தெரிசெய்யப்படவுள்ளனர். இவர்களுக்கான போட்டி பரீட்சை எதிர்வரும் ஜூலை மாத இறுதியில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உட்பட 25 மாவட்டங்களிலும் நடைபெறும்.

இப்பரீட்சைக்கான கட்டணம் நூறு ரூபா, விண்ணப்பங்களை அனுப்பும் இறுதி திகதி எதிர்வரும் (ஏப்ரல்) 30 ஆம் திகதியாகும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் சுகாதாரத் திணைக்களம், ஸ்ரீஜயவர்த்தனபுர மருத்துவமனை ஆகிய இரண்டில் ஒன்றிற்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

சுகாதார திணைக்களத்திற்கு சேர்க்கப்படுபவர்களில் 5 வீதமான இடங்கள் ஆண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால் ஜயவர்த்தனபுர மருத்துவமனைக்கு ஆண்கள் எவரும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி வர்த்தமானியில் விபரங்கள் உள்ளன. ப-6

அறிவித்தல்
தொழிலாளர் கல்வி
அனுமதி நேர்முகப்
பரீட்சை

## அறிவித்தல்

### கல்வி பட்டப்பின் டிப்ளோமா 1990/91

1990/91ஆம் கல்வி ஆண்டுக்கான கல்வி பட்டப்பின் டிப்ளோமா பயிற்சிநெறி அனுமதித் தேர்வுப் பரீட்சை 1991.04.21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணிக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளது. தகைமைகளை உடைய விண்ணப்பதாரர்களின் சொந்த முகவரிக்குத் தபாலில் அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் 1991.04.19ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழமையான அலுவலக நேரத்தில் பல்கலைக்கழகத் தேர்வுகள் கிளையில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

பதிவாளர்.

1991.04.15

04083

---

த்ததாமதமுமின்றி வங்கிகள் மேற்கொள்ள அந்தந்த வங்கிகளுக்கு காசோலைகள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக ஓய்வூதியப் பிரிவினர் தெரிவித்தனர் (66)

**கல்வி...**

கள் நடைபெறும்.

வெளி மாவட்டங்களைச் சேர்ந்த ஆண் ஆசிரியர்களுக்கு யாழ் இந்துக் கல்லூரி விடுதிலும் பெண் ஆசிரியைகளுக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரி விடுதியிலும் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம் தெரிவித்துள்ளார். (12)

**பேசாலையில்...**

ளனர். அத்துடன் இனிமேல் படையினரால் இவர்கள் பிடிக்கப்பட மாட்டார்கள் என மன்னார் இராணுவ முகாம் படையதிகாரிகள் உறுதி மொழியளித்துள்ளனர்.

இந்த அகதிகளை விடுவிக்குமாறு ஐ. நாடுகள் ஸ்தாபனம் அரசிடம் கோரிக்கை விடுத்தது பற்றி செய்தி வெளிவந்தது தெரிந்ததே. (ப-11)

**மணலாறில்...**

ஷெல்-11, 60 எம். எம் மோட்டார் பராவைட்-2, ரைபிள் கிரனைட்-7, ஜே. ஆர் கிரனைட்-9. (71)

**மேதின...**

கொள்ளவேண்டுமென கூட்டுறவுத் துறை பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

அன்றைய தினம் இடம்பெறவுள்ள நீண்ட தூர ஊர்வலத்தில் பலவேறு நிகழ்வுகளைச் சித்தரிக்கும் அலங்கார ஊர்திகளும் இடம்பெறவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது (66)

**ம. நோ. சு....**

தேவைகள் குறித்து தொடர்பு கொண்டபோதே இதனைத் தெரிவித்தார்.

கப்பல் மூலம் கொண்டு வரப்படும் பொருள்களை பருத்தித்துறையில் இருந்து ஏனைய பகுதிகளுக்கும் சங்கக் கிளை நிலையங்களுக்கும் லொறிகள் மூலம் அனுப்புவதற்கு வழங்கப்படும் டீசல் போதாமையால் துறைமுகங்களிலேயே பொருள்கள் தேங்கிக்கிடப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (66)

கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறான அத்தியாவசிய அலுவல்கள் நிமித்தம் செல்பவர்களுக்கு கொழும்பில் தங்குமிட வசதிகளை இங்குள்ள உயர் அதிகாரிகள் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி ஏன் ஏற்படுத்திக் கொடுக்க முடியாது எனவும் பாதிக்கப்பட்டோரால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. 77

**கப்பலில்...**

லில்லி கப்பல் மூலம் 1500 மெ. தொன் அரிசி, 650 மெ. தொன் மா, 300 மெ தொன் சீனி 70மெ தொன் பயறு, 50 மெ தொன் பருப்பு, 115 மெ. தொன் பால்மா, 38 பரல் மண்ணெண்ணெய் மற்றும் குறைந்தளவில் இதர பொருள்களும் வந்துள்ளன.

சங்கங்களின் கையிருப்பிலுள்ள பொருள்களுடன் கப்பலில் வந்தவற்றையும் சேர்த்து சகலருக்குமென 5 வது கட்ட உலர் உணவு விநியோகத்தை சமாளிக்க முடியும் எனவும் செயலக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். (66)

**மாசிமாத...**

பர்களுடனும் தொடர்பு கொண்டு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமெனவும் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (66)

ும் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி வர்த்தமானியில் விவரங்கள் உள்ளன. ப-6

**ஒரேநாளில்...**

நேற்று முன்தினம் கோயில் கொடியேற்ற விழாவை கண்டு களிக்க வந்த பக்தர்களின் சைக்கிள்களே இவ்வாறு திருடப்பட்டன (74)

**முஸ்லிம்...**

இடம்பெயர்ந்த முஸ்லிம் ஆசிரியர்களுக்குகொடுப்பனவு கிடைக்கவேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாககல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. 78)

**தி. மு. க...**

ளது.

இது தொடர்பாக முரசொலிமாறன் கருத்து தெரிவித்த போது முன்னர் உடன்பாடு கண்ட ஆசனங்களிலும் விட தற்போது கூடியளவு ஆசனங்களை ஜனதாதள் கட்சியினர் கேட்கின்றனர். மாநில கட்சி ஒன்றின் துணையின்றி இவ்வாறு அதிக தொகுதிகளில் போட்டியிட முடியாது என்றார்; மேற்கொண்டு ஜனதாதள் உடன் தி மு க. பேச்சு நடத்தப் போவதில்லை எனவும் அவர் எச்சரித்துள்ளார்;

---

## அறிவித்தல்

### தொழிலாளர் கல்வி அனுமதி நேர்முகப் பரீட்சை

1989/90ஆம் கல்வி ஆண்டுக்கான தொழிலாளர் கல்வி நெறிப் பயிற்சி அனுமதி நேர்முகப் பரீட்சை 1991-04-19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 9-00 மணிக்கு பல்கலைக் கழகத்தில் நடைபெற உள்ளது நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் சொந்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டோரின் சுட்டிலக்கங்கள் பல்கலைக் கழக அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ளது நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் கிடைக்கப்பெறாதவர்கள் 1991-04-18 ஆம் திகதி வியாழக்கிழமை வழமையான அலுவலக நேரத்தில் பல்கலைக்கழக தேர்வுகள் கிளையில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

பதிவாளர்

1991-04-15 04082

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி லக்ஷ்மி பில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 16-04-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.